பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 07 2024 **SATURDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.
2. தமிழகத்தில் மின் கட்டண உயர்வு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. முல்லைப்பெரியாறு அணை பலமாக உள்ளது என்று அதன் துணை கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.
4. தமிழகத்திலிருந்து கனிம வளங்களை அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச்செல்வது தடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு துரைமுருகன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
5. ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

<<<<<<<>>>>>

நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டம் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மத்திய புலனாய்வு துறைகளின் நடவடிக்கைகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அவர், அனைத்து அமைப்புகளும் ஒன்றாக இணைந்து, தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தும் விதத்தில் கிடைக்கும் தகவல்களை அனைத்து அமைப்புகளும் தேவைக்கேற்ப பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மின் கட்டண உயர்வு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் புஞ்சைப்புளியம்பட்டியில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், திமுக அரசு அடிக்கடி மின் கட்டண உயர்வை அறிவித்து வருவதாகவும், ஏற்கனவே உயர்த்திய மின் கட்டண உயர்வால் ஈரோடு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பல தொழில்கள் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், மீண்டும் மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இந்த கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

*<u>(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 20 செகண்ட்ஸ்)</u>*

முன்னதாக, கோவை மாவட்டம் அன்னூர் பகுதியில் பேசிய அவர், தேர்தலில் தாம் அளித்த வாக்குறுதிபடி, அன்னூர் மற்றும் அவிநாசி பகுதிகளில் மிகப்பெரிய ஜவுளிப்பூங்கா அமைக்கப்படும் என்றும், சேலம் - அன்னூர் - மேட்டுப்பாளையம் வழியாக நான்குவழிச்சாலை அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அவிநாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கேள்விக்குரியாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

அவிநாசி – அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

முல்லைப்பெரியாறு அணை பலமாக உள்ளது என்று அதன் துணை கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

தேனி முல்லைப்பெரியாறு அணையை கண்காணித்து பராமரிக்க அமைக்கப்பட்ட மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் தலைமையிலான துணைக்குழுவினர் அணையை நேற்று ஆய்வு செய்தனர்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்திற்கு ஏற்ப, அணையின் கசிவு நீர் நிமிடத்திற்கு 81 புள்ளி எட்டு ஏழு ஐந்து லிட்டராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

அணையின் 13 மதகுகளில் மூன்று மதகுகளை இயக்கி சரிபார்த்தனர்.

மேலும், அணையில் பருவமழை காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப்பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

இம்மாதம் 31-ஆம் தேதிவரை 137 அடி தண்ணீர் தேக்கிக் கொள்ளலாம் என்றும் மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆய்வறிக்கையில் துணைக்குழு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்திலிருந்து கனிம வளங்களை அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச்செல்லும் வாகனங்களை கைப்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் அவர் தலைமையில் சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பேசிய அவர், பறக்கும் படைகள் திடீர் தணிக்கை மேற்கொண்டு கனிம வளங்கள் சட்டத்திற்கு புறம்பாக எடுத்துச் செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும் கனிம வளத்துறையின் வருவாயை பெருக்குவதற்கு சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் வைத்துள்ள நிலுவைத் தொகையினை வசூல் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு திரு துரைமுருகன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக உதகை, குந்தா, கூடலூர், பந்தலூர் ஆகிய பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

வானிலை ஆய்வு மையம் விடுத்திருந்த சிவப்பு மற்றும் ஆரஞ்ச் எச்சரிக்கையின்படி, கடந்த நான்கு நாட்களாக அங்கு கனமழை பெய்து வருகிறது.

பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு குடியிருப்புப்பகுதிகள் சேதமடைந்துள்ளன.

தொடர் மழை காரணமாக உதகை, குந்தா, கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய வட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு இன்று மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இரண்டாவது நாளாக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன், அம்மாவட்ட ஆட்சியர் திருமதி லஷ்மி பவ்யா ஆகியோர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்தனர்.

பல இடங்களில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று வடமேற்கு மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒடிஷா மற்றும் வட ஆந்திர கடலோர பகுதிகளையொட்டி நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று காலை ஒடிஷா மாநிலம் பூரிக்கு அருகே கரையை கடக்கக்கூடும் என்றும், இதனால் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், மாநிலத்தில் வரும் 21 முதல் 25-ஆம் தேதிவரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய தென் தமிழக கடலோர பகுதிகளில் இன்றும் நாளையும் மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும், எனவே இந்த பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், யுக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இந்தியா – யுக்ரைன் இடையிலான உறவுகள் குறித்து விவாதித்ததாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.

----------------

பூட்டான் பிரதமர் திரு Tshering Tobgay-ஐ, வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரியை சந்தித்து இருநாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து விவாதித்தார்.

-------------

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, ஒருநாள் பயணமாக இன்று ஜார்கண்ட் மாநிலத்திற்கு செல்கிறார்.

------------

குஜராத் மாநிலம் டுங்ரி ரயில் நிலையம் அருகே சரக்கு ரயில் தடம் புரண்டது. இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

-------------------

கோவை மாவட்டத்தில், எட்டாவது கோயம்புத்தூர் புத்தக திருவிழா கொடிசியா வளாத்தில் நேற்று தொடங்கியது. இதனை மாவட்ட ஆட்சியர் திரு காந்திகுமார் பாடி, மாநகர காவல் ஆணையாளர் திரு பாலகிருஷ்ணன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

-------------

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏழாவது புத்தகத் திருவிழா அரண்மனை வளாகத்தில் நேற்று தொடங்கியுள்ளது. இது, வரும் 29-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

---------------

திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கருவூல ஆணையரகம் சார்பில் வருமான வரி பிடித்தம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

--------------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் 47-ஆவது ஆண்டு கபிலர் விழா நடைபெற்றது.

--------------------

தமிழகத்தில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகளில் மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மருத்துவ மற்றும் ஹோமியோபதி துறை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

இலங்கையின் தம்புலாவில் நடைபெற்ற "ஏ" பிரிவு லீக் ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி 19 புள்ளி இரண்டு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 108 ரன் மட்டுமே எடுத்தது.

பின்னர் விளையாடிய இந்திய அணி 14 புள்ளி ஒரு ஓவரில், மூன்று விக்கெட் இழப்பிற்கு 109 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

<<<<<<END>>>>>